காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில்கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திம்மராஜாம்பேட்டை ஊராட்சியில் நலத்திட்டங்கள் மற்றும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை கழக பேச்சாளர் கந்திலி கரிகாலன் சிறப்புரை ஆற்றினார்கள். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் ஒன்றிய செயலாளர் பி.சேகர் பேரூர் செயலாளர் என்.பாண்டியன் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், தலைமை கழக பேச்சாளர் விஷ்ணு தமிழரசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.சஞ்சய் காந்தி, மாவட்ட நெசவாளர் அணி ஏ.கணேசன்இ ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வி.குமரன், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தியாகராஜன், லோ.ரமேஷ், எஸ்.எஸ். கே.சத்யாகார்த்திக் குமார், ராஜ் பிரகாஷ், உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள்உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் பிறந்த நாள் விழா: மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் – மார்ச் 2 அன்று

சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – நல உதவிகள் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை, பிப். 28-

சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு தலைமையிலும் - அவரது நிகழ்ச்சி ஏற்பாட்டிலும், மாபெரும் பொதுக்கூட்டமும், ஏராள மானோர்க்கு நல உதவிகள் வழங்கிடலும் நடைபெறுகிறது.

2.3.2025 - ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில், சென்னை - மயிலாப்பூர் - ஆர்.கே.மடம் சாலை - இந்தியன் வங்கி அருகில் நடைபெறும் இம்மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நல உதவிகள் வழங்கும் நிகழ்வுக்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, மேற்குப் பகுதிச் செயலாளர் நந்தனம் இ.மதி, தியாகராயர் மேற்குப் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, மு.சத்யா, கே.மலர், என்.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு ஏராளமானோர்க்கு நல உதவிகள் வழங்கிச் சிறப்புரையாற்று கிறார்.

தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ.,

சு.வில்லவன், கோ.சு.மணி, செல்வி சௌந்தரராஜன், மந்தை வெளி அ.பாபு, வேலு சம்பந்தம், யோகேஷ் ரவி, எம்.ஆறுமுகம், அ.வாசுதேவன், ஜெ.ஜானகிராமன், ஜி.டி.அம்பேத்கார், எஸ்.மோகன், நந்தனம் நம்பிராஜன், மு.தம்பிதுரை, சி.தசரதன், டாக்டர் கலை கதிரவன், டாக்டர் ஜெ.அருண்,

ஏ.தாஸ், அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரைபார்த்திபன், பா.பொன்னுசாமி, டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன்,

டி.கமலஹாசன், தட்சன் ஹரிஹரன், ந.மோ.முரளி, கே.எஸ்.வெல்டிங்ராஜா, பி.ஜெயகுமார், பி.மாரி, மு.ம.செந்திலகுமார், எம்.கிருஷ்ணமூர்த்தி, எம்.எஸ்.பழனி, மு.செல்வகுமார், கே.சக்திவேல், ஜி.பி.செந்தில்குமார், என்.துரை, எஸ்.லட்சுமி காந்தன்,

ராஜா அன்பழகன், எஸ்.சரவணன், மயிலை ஆர்.பாலு, எஸ்.பானுசலீம், ஆர்.கதிரவன், விஜய் வெங்கடேசன், கே.மோனிஷா, சி.கணேஷ்பாண்டியன், பூவியூர் டி.மோசஸ், ம.ஆனந்தன், ச.சண்முக நாதன், சாந்தோம் ஆ.அந்தோணி, ஜெ.ஜெகன்ராஜ், ஆர்.குமரன், ஏ.சத்தியமூர்த்தி, டாக்டர் கோ.சக்தி விக்னேஷ், என்.எஸ்.பாலசுப்ரமணி, என்.வடிவேல், இரா.சக்கரவர்த்தி, கே. வெங்கட்ராமன், பி.கே.ராஜேஷ்கண்ணா, அ.ரேவதி, கீதாமுரளி, கார்த்திகா பாஸ்கர், எஸ்.பாஸ்கர், கோமதி கண்ணன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

124 'அ' வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு, 124வது வார்டு மாமன்ற உறுப்பினர் விமலா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

முன்னதாக கலைமாமணி இறையன்பன், குத்தூஸ் குழுவினரின் கழக இன்னிலை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புக்கள் அனைவரும் தவறாமல் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம்1 உட்பட்ட வார்டு எண்1 அனகாபுத்தூர் பகுதியில் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் புதிய கிராம நிர்வாக அலுவலம் அமைத்துத் தந்து நேற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அப்பொழுது தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மண்டல தலைவர் வே.கருணாநிதி, பகுதி கழக செயலாளர் த.ஜெயகுமார், மாமன்ற உறுப்பினர்கள் கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார் சித்ரா தமிழ்குமரன், வட்டக் கழக செயலாளர்கள், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வி. நித்யானந்தம்

பிப்ரவரி 28 (2020)

இளமைக் காலம் முதல் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நகர இளைஞர் அணி அமைப்பாளர், நகரச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

வாலாஜா நகர்மன்ற உறுப்பினராகவும், பின்னர் நகர்மன்றத் தலைவராகவும் பதவி வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
02.03.2025 ஞாயிற்றுக்கிழமை	காலை 9.00 மணி	கள்ளக்குறிச்சி தெற்கு	கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், தியாகதுருகம் பிரதான சாலை, கள்ளக்குறிச்சி.
	மாலை 4.00 மணி	கள்ளக்குறிச்சி வடக்கு	கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக அலுவலகம், ராஜா நகர், கள்ளக்குறிச்சி.

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 26-02-2025

வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. நிகழ்ச்சி ஏற்பாட்டில்

திருவள்ளூர் தொகுதியில் 10,000 மாணவர்களுக்கு பொதுத்தேர்விற்கான உபகரணங்கள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

திருவள்ளூர், பிப். 28

திருவள்ளூர் மேற்கு மாவட்டம், திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்கள் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற ஊக்குவிக்கும் வகையில் 10,000 மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்கள் மற்றும் பொதுத்தேர்விற்கான உபகரணங்கள் வழங்கும் விழா இன்று (28.02.2025 வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருவள்ளூரில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று 10,000 மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்கள் மற்றும் பொதுத் தேர்விற்கான உபகரணங்களை வழங்கி சிறப்பிக்கின்றனர்.

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி ஆலோசனை கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு அறிவிப்பு !

சென்னை பிப்:28

கழகத் தலைவர், தமிழ் நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு;

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (28.2.2025 வெள்ளிக்கிழமை) மாலை 7 மணி அளவில் காமராஜர் சாலையில் உள்ள எனது அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாவட்ட வர்த்தக அணி தலைவர் த.சீனிவாசன்,துணைத் தலைவர் க.மதியழகன், துணை அமைப்பாளர்கள் லயன் சி.எஸ்.நந்தகுமார், ஆர். கோவிந்தராஜ்,கோ.சு. கருணாநிதி,ஏ.பாஸ்கர், மாயா,வே.கனிமொழி, ஸ்ரீ கணேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இதில் மாவட்டத்திற்கு உட்பட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மயிலை ஆர்.பாலு அறிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்:

மாதவரம் 30 (அ) வட்டத்தில் நல உதவிகள் வழங்கல்!

வட்டச் செயலாளர் டி. சுந்தரம் வேண்டுகோள்!

சென்னை, பிப். 28

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்குப் பகுதி 30 'அ' வட்ட கழகத்தின் சார்பில் இந்திய திருநாட்டின் தலைசிறந்த முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு 30 (அ) வட்டக் கழகத்தின் சார்பில் விநாயகபுரம் திருவள்ளுவர் சிலை அருகில் நாளை (1.3.2025) காலை 8 மணி அளவில் கழக கொடியினை ஏற்றி திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி விநாயகபுரம் மனநலம் குன்றிய சமர்ப்பணம் இல்ல மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கி கேக் வெட்டி சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இதில் பகுதி கழக செயலாளர் ஜி.துக்காராம், மாமன்ற உறுப்பினர் திருமலை ஜி. துரைசாமி, புத்தகரம் இ.ஏழுமலை, எம்.சரவணன், இ.ராமன், ஜி.பார்த்தசாரதி, மு.குட்டி மோகன், லட்சுமி காந்தன், கே.நரேந்திரன், எஸ்.என்.ராஜி, பி.எஸ்.என்.எல்.தயாளன், ஏ.ரவி முருகன், எம்.சீனிவாசன், அபிப் ரகுமான், எஸ்.பி.கண்ணன், சி.பரமேஸ்வரி, சி.உமாமகேஸ்வரி, வெற்றிவேல், சரத் நரேந்திரன், டி.எஸ்.உதயநிதி, பி.எஸ்.என்.எல்.குமார், டி.வி.எஸ். கோபி, காஞ்சி சண்முகம், வி.பாஸ்கர் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

எனவே இந்நிகழ்ச்சியில் வட்டத்தில் உள்ள அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டக் கழகச் செயலாளர் டி. சுந்தரம் கேட்டுக் கொண்டுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ப. பழனிவேல்

பிப்ரவரி 28 (2022)

தனது இளமைப் பருவத்திலேயே கழக உறுப்பினராகி பணியாற்றி வந்தவர்.

ஒன்றுபட்ட நாகை மாவட்ட விவசாய அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை வடவூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், இரண்டுமுறை ஒன்றியக்குழு உறுப்பினராகவும், நாகை மாவட்ட ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.